RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# சைவ அடியார்களின் பக்தி இலக்கியக் கொள்கைகள்

**சா. ரோஸ்லின் [அ,*]**

[அ] தமிழ்த்துறை, இலொயோலா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, மெட்டாலா, இராசிபுரம் (வ), நாமக்கல் இந்தியா,

# Bhakti Ideology in the Literature of the Saivite Saints

**S. Rosline [a,*]**

[a] Department of Tamil, Loyola College of Arts and Science, Mettala, Namakkal District - 636202, Tamil Nadu, India

*Corresponding Author:
roseline@loyolacollege.ac.in

**ABSTRACT**

The devotional principles embodied in Bhakti literature are reflected in the exemplary lives of the Saivite saints, who dedicated themselves to sanctifying human existence and attaining union with the Divine. Their teachings advocate a way of life that leads to spiritual enlightenment, inner well-being, and liberation through unwavering devotion to Lord Siva. These ideals emphasize the transformative power of devotion, moral discipline, and selfless service as the foundation of a meaningful and spiritually fulfilled life. The Tirumurai hymns emerged as sacred musical expressions of worship, enabling devotees to praise the Lord through song and experience divine grace. The Thevaram hymns, in particular, serve as powerful mediums through which devotees express their love and reverence for Siva while seeking His blessings. The profound and unwavering devotion of the Saivite saints gave rise to numerous miraculous experiences and became a source of spiritual inspiration for generations of devotees. The literary principles articulated by the Saivite saints have played a vital role in preserving the presence of the Divine in the hearts of the people. Serving as both a spiritual guide and a bridge between humanity and God, these devotional works continue to inspire religious faith, ethical living, and cultural continuity. This article examines the literary principles of Bhakti as reflected in the works of the Saivite saints and highlights their enduring significance in Tamil religious and literary traditions.

**Keywords:** Tamil religious, Saivite saints, Bhakti literature, Spiritual guide, Tirumurai

## முன்னுரை

பக்தி என்பது வடமொழிச் சொல், இறைவனைப் பற்றிப் புகழ்ந்து பாடும் பாடல்கள் பக்திப்பாடல்கள் எனப்படும், பக்தி என்பது இறைவனிடத்தும், இறையடியார்களிடத்தும் கொள்ளும் அன்பு. இது மனிதன் இறைவனோடு கலந்து நிற்றலைக் குறிக்கிறது என்றும் கூறுவர். இறைவன் மீது கொண்ட நம்பிக்கை உணர்வும், அதனால் பிறக்கும் பற்றுணர்வும் உள்ளத்திலிருந்து சொற்களாக உருவெடுத்து இலக்கியமாக மலர்கின்றன. அவை பக்திப் பொருளாகின்றன.

## பக்தி இலக்கிய கொள்கை

இறைக்கொள்கை என்பது இறைவனைப் பற்றி ஒவ்வொரு சமயமும் வைத்திருக்கும் மதிப்பாகும், நல்வினை, தீவினை, சொர்க்கம், நரகம், வீடு பேறு முதலியன பற்றியும் சைவ சமய இலக்கியங்கள் பாடுகின்றன இவற்றையும் பக்தி இலக்கியக் கொள்கைகள் என்றே கூற வேண்டும். உலகை படைத்தவன் இறைவன் சைவ அடியார்கள் பாடிய பக்தி தேவாரப் பாடல்கள் மக்களுக்கு நல்வாழ்வளிப்பதாகும்.

## அடியார்கள் அக வழிபாடு

பற்பல கோயில்களுக்குச் சென்ற அங்குள்ள திருவுருவங்களை வழங்குதல் வேண்டாம் கோவில் உள்ள உருவங்கள் தம் மனங்களிலேயே உள்ளது என்பதை புரிந்து கொள்ள வேண்டும் என்பதே அக வழிபாடு எனலாம் இதே கருத்தை சிவவாக்கியர்,

“கோயிலஎவ தேதடா குளங்களாவ தேதடா

கோயிலுங் குளங்களுங் கும்பிடுங் குலாமரே

கோயிலு மனத்துனே குளங்களு மனத்துளே

ஆவதுமழிவது மில்லையில்லை (சிவவாக்கியர் ; 153)

எனக்குறிப்பிடுகிறார்.

தேவாரம் ஒரு பக்தி மார்க்கம்

சைவ நாயன்மார்களான திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மூவரும் தமிழில் பாடிய துதிப் பாடல்கள் தேவாரம் என வழங்கப்படுகின்றன தேவாரம் என்ற சொல்லுக்கு இரு பொருள் கொள்ளலாம்.

தே + வாரம் என்றால் துதிப்பாடல் எனவும் தே + ஆரம் என்றால் இறைவனைப் பற்றி துதிப் பாடலாகிய மாலை எனவும் இரு பொருள் கூறலாம்.

பண்டைத் தமிழ் இசையில் வாரம் என்பது இலக்கியச் சுவை நிறைந்த இசை அணையோடு பாடப்பட்ட தெய்வப் பாடல்களை குறித்தது பாடல்களில் நான்கு பிரிவுகள் முநனடை, வாரம், கூடை, திறல் எனப்பட்டன சிலப்பதிகாரத்தில் வாரப் பாடல்களை பற்றிய குறிப்புகளைக் காண்கிறோம். தேவார பதிகங்கள் கிபி 7,8,9 ம் நூற்றாண்டுகளில் எழுந்தவை இடையே வழங்கினின்றும் மறைந்த இப்பாடல்களை மறுபடியும் திரட்டியவர் நம்பியாண்டார் நம்பி என்றும் சைவம் பெரியவராவர், தேவாரப் பதிகங்களை முறைப்படி ஓதும் இசை வார்களாகிய 'ஓதுவார்' களைச் சோழ அரசர்கள் எல்லா சிவத்தலங்களிலும் நியமித்திருந்தனர். இவ்வாறு தேவாரப்பண்ணிசை நாடெங்கிலும் பரவியது.

## சிறப்புலி நாயனார் கொள்கை

தம்மிடம் இல்லை என்று வந்தவர்க்கு இல்லை என்று கூறாமல் கொடுத்து வந்த சிறப்புலி நாயனார் சோழநாட்டில் உள்ள திருவாக்கூரில் அந்தணர் குளத்தில் தோன்றினார். இறைவனிடம் அன்பு செலுத்தி வேள்விகள் செய்தார் தனக்கு எதுவும் வேண்டாம் எம்பெருமானின் ஆசீர் பெற்று அவருடைய திருப்பாதத்தை அடைய அறநெறிகளை பின்பற்றி வாழ வேண்டும் தன்னைவிட அனைத்து உயிர்களுக்கும் பெரியவரான எம்பெருமானே மேலானவர் அவர் வழிநடத்திட வேண்டும் என்ற கொள்கையை கடைபிடித்து வாழ்ந்தார்.

”திருஆக்கூர் அருமறையோர் உலகம் ஏத்தும் சிறப்புலிபார் மறப்புலியார் உரிமேல் செங்கண் - என்று சிறப்புலி நாயனாரைப் பற்றி உமாபதி சிவாச்சாரியார் புகழ்ந்துப் பாடியுள்ளார்.

## நாயன்மார்களின் குறிக்கோள்

பக்தி இலக்கியத்தின் முன்னோடிகள் காரைக்கால் அம்மையார் நாயன்மார்கள், திருமூலர், ஆகியோராவர். அவர் திருமூலர் திருமந்திரத்தில் சிவத்தைச் சைவ முழுப் பொருளாக குறிப்பிட்டுள்ளதை,

அன்பும் சிவமும் இரண்டென்பார் அறிவிலார்

அன்பே சிவமாக தொரு மறிகிலாம்

அன்பே சிவமாவ தாரு மறித்தபின்

அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே

இன்று பாடல் சுட்டியுள்ளது

## குறிக்கோள் வாழ்வு

மனித வாழ்வு சிறப்பாக வேண்டுமானால் ஒரு குறிக்கோள் அமைதல் வேண்டும் அதற்காக வாழ்பவன் மனிதன்.

அத்தகைய குறிக்கோளை குறுகிய குறிக்கோளாகக் கொள்ளாமல் எங்கும் பரந்து விளங்கும் ஒன்றினை குறிக்கோளாக கொண்டு வாழ்வது சிறந்த வாழ்வின் அடையாளமாகும்.

இந்தக் குறிக்கோள் வாழ்வையே பெரியபுராணத்தில் இடம் பெற்றுள்ள அறுபத்தி மூன்று நாயன்மார்களும் வாழ்ந்து உள்ளவர்" அவ்வாழ்வின் குறிக்கோளைச் சேக்கிழார் தொண்டர்களின் தெரு கூட்டத்தின் பெருமையை விளங்கும்பொழுதுத் தெளிவுபடுத்தியுள்ளார்.

## பக்தி இலக்கிய கொள்கையின் சிறப்பு

சைவ சமயத்தில் குருவிற்கு முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது. தன் அறிவை கண்களை திறந்து உலகத்தின் செயல்பாடு, திறன், ஞானம், மெய்பாடு, சிந்தனைகள் உணரச் செய்யும் ஆசானின் செயல் தம்மை நல்வழிப்படுத்தும் வாழ்வுக்கு அழைத்துச் செல்கிறது. அத்தன்மையுடைய குருவிற்கு தரப்படும் மேன்மைப் பற்றி திரு பெரியபுராணத்தில் கூறுவது.

"குருவே தினமு மெய்வருத்திக் டிகானரு மழியாப் பெருநிதியாங்

குருவே யிரவுபகல் பயிற்றிக் கூற வடையும் பெருங்கல்வி

குருவே பரமா னந்தத்தைக் கூட்டு மழியாத் திரவீடு

குருவே மனவா சகங்கடந்து கூற வரிதாம் பரப்பிரம்மம்"

என்று குறிக்கப்பட்டுள்ளது.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், ஆகியோரை குருவாக வழிபட்டு சிவனடி அடைந்தவர்களை குருவருளால் பேறுப்பெற்ற நாயன்மார்கள் என்று கூறுதல் சைவ மரபு.

பக்தி இலக்கிய கொள்கைகள் தனிக்கொள்கை அன்று பல கொள்கைகளை உடையது "அன்பு" என்ற சிவமயத்தையே பரம்பொருளாகக் கொண்டது. அத்துடன் பல்வேறு கொள்கைகளையும் வேறுபட்ட சடங்குகளையும் ஒத்துக் கொள்கிறது. மன தூய்மை முதலாகச் சமயம் ஈராகச் சொல்லப்படும் எல்லாக் கொள்கைகளும் கலந்த ஒரு கூட்டு என்று சைவ சமயத்தை கூறுதல் சிறப்புடையது "சிவம்"" என்னும் சொல்லுக்கு தான் மங்கலமாயிருந்து தன்னை அடைபவர்களுக்கு மங்களத்தை கொடுப்பது கிபி 7, 8, 9 நூற்றாண்டுகளில் தமிழ்நாட்டில் சைவ நாயன்மார்களும், வைணவ ஆழ்வார்களும் தோன்றிய பக்தி பாடல்கள் மற்றும் இலக்கியங்கள் மூலம் பாடி ஊர் ஊராகச் சென்று தம்தம் சமயங்களை பரப்பி பற்றிக் கொள்கை- களையும், நெறிமுறைகளையும் வெளிப்படுத்தினார்கள்.

## புனிதவதியாரின் பக்தி இலக்கியக்கொள்கை

புனிதவதியாக இருந்த அம்மையார் இறைவன் மீதுக் கொள்ள அளவற்ற அன்பினாலும், பக்திக் கொள்கையாலும் 63 நாயன்மார்களில் காரைக்கால் அம்மையாரும் என சிறந்து விளங்கியவர் ஆவர் புனிதவதியாராக இருந்து இல்லறம் புகுந்த பின்பும் அடியார் பெருமக்களை போற்றுவதிலும் அவர்களுக்கு உணவு வழங்குவதிலும் சிறந்து விளங்கினார். இல்லற வாழ்வினையும் சிறப்பாக வாழ்ந்து வந்தார்.

தெய்வமாக வழிபட்டமையை அறிந்து கணவனுக்காக பெற்ற இவ்வுடல் இனி எழிலும் சதைப்பற்றும் கொள்ளல் கூடாது என்றெண்ணித் தன் ஊனுடலை வெறுத்து எலும்புருவைப் பெற்றார் இந்நிலையில் இறைத்தன்மை அவர் மீது நின்றது. அரவு போல் ஊர்ந்து செல்லல், தலையால் நடத்தல் போன்ற அற்புத நிலைகளையும் பெற்றார்.

அம்மையார் சிவக் கொள்கையில் நிலைத்து, தன்னை படைத்த எம்பெருமானுக்கே என் உள்ளம், என் இறைப் பணி, என் ஆயுள் என்று தம்மை இறைவனுக்கு அர்ப்பணித்தார்.

நிலையான சொந்தம் என் அப்பனே! எனவே தம் வாழ்க்கையில் செய்ய அறச் செயல்களையும், உயிர்களிடம் அன்பு, கருணை, சிவத்தொண்டு, பொருள்கள் மேல் ஆசை கொள்ளாமை, செல்வம் சேர்த்து வைத்தல் போன்ற கொள்கை மீது உறுதியாக இருந்தார்.

அவரின் உள்ளம் இறைவனைப் பற்றியும், அற இலக்கியப் பற்றியும் நிலைப் பெற்று இருந்ததால் இறைவனின் கருணையைப் பெற்று 63 நாயன்மார்களில் ஒருவராகவும், சிவ அடியாராகவும் போற்றப் பட்டார் பெண்மை உணர்வுக்கு எடுத்துக்காட்டாகவும் திகழ்ந்தார்.

## சைவ பதிகம்

பதிகம் என்பது பத்துப் பாடல்களை கொண்டது. பெரும்பாலும் ஒவ்வொரு பதிகத்திலும் எட்டாம் பாடலில் இராவணன் கயிலாய மலையைத் தூக்க முயன்று துன்பப்பட்டதையும், ஒன்பதாம் பாடலில் பிரமனும், மாலும் தேடிக் காண முடியாத சிவன் என்றும், பத்தாம் பாடல்கள் சமண பௌத்த மதத் துறவிகளின் போலி வாழ்க்கையைக் கடிந்தும், எள்ளி நகையாடியும், பதினோராம் தம் பெயரை இணைத்தும் அப்பதிகத்தைப் படிப்பதனால் உண்டாகும் பயனைக் குறிப்பிட்டும் பாடியுள்ளார்

"சொல்மாலை ஓதும் அடியார்கள் வானில்

அரசான்வர் ஆணை நமதே (இரண்டாம் திருமுறை பதிகம் 85:11)

"வானிடை வாழ்வர்; மண்மிசைப்பிறவார் மற்றிதற்கு

ஆணையும் நமதே" மூன்றாம் திருமுறை பதிகம் 118-11)

என்று ஆணையிட்டு பாடுவார் ஞானசம்பந்தர்

இவ்வாறு பதிகங்களைப் பாடி திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர், மற்றும் 63 நாயன்மார்கள் போன்றவர்கள் இறைவனின் அருளை புலப்படுத்தும் வகையில் அற்புதங்களை செய்தனர், பக்தி நெறியில் வாழ்ந்தனர்.

## முடிவுரை

சைவ நெறி முறைகளைக் கடைபிடித்து வாழ்ந்த சைவ அடியார்களின் கொள்கைகள் மக்களுக்கு சிறந்த சான்றாகவும், இறுதியில் இறைவனின் திருப்பாதத்தை அடையக் கூடிய வழிமுறைகளை காட்டக் கூடியதாகவும் அமைகிறது. பக்தியின் மேன்மை மக்கள் வாழ்க்கை முறை, திருத்தொண்டர்களின் சிறப்பு, பக்தி நெறிமுறைகள், போன்றவற்றை அறிந்து கொண்டு நல்வழியில் இவ்வுலக மக்கள் வாழ வழிகாட்டுதலாகவும் அமைந்துள்ளது.

## References

தமிழ்ச்சேர்னார், வீ. (1988) பெரியபுராணம், சேக்கிழார் பன்னிரு திருமுறை மன்றம் காரைக்கால்.

திருஞானசம்பந்த சுவாமிகள், (1978) அற்புதச் செயல்கள் ஆதீனம், மதுரை.

செங்கல்வராய பிள்ளை, (1959) தேவார ஒளி நெறிக்கட்டுரை, சென்னை

சுவாமி சித்பவானந்தர், (1980) பன்னிரு திருமுறை வரலாறு, சிதம்பரம்

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License